# கலைஞரும் நானும்

81

**"முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தாய்-பிள்ளை உறவைப் போல, என் மீது அக்கறை கொண்டிருந்தார். அவர் சிந்தித்துச் செயல்படுத்திய ஒரு திட்டத்தில் இருந்துதான் நான் ஐ.பி.எஸ் படித்து வந்தேன்" என தனது நினைவுகளைப் பகிர்கிறார் முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரி திலகவதி.**

*"கலைஞர் என்றால், தமிழ்நாட்டின் முன்னேற்றம். அவர் சிந்தித்துச் செயல்படுத்தியது தான் தமிழ்நாட்டின் ஒவ்வொரு திட்டமும். அவர் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் வந்த போதெல்லாம், 'மக்களுக்கு என்ன தேவையாக இருக்கிறது. யாருக்கு என்ன செய்ய வேண்டும்' என யோசித்து யோசித்துச் செயல்படுத்தி இருக்கிறார். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களின் முன்னேற்றத்துக்கு என்ன செய்யலாம் என சிந்தித்துக் கொண்டே இருந்தவர்.*

*அதில் ஒன்றுதான் 1971-ஆம் ஆண்டில் அவர் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கி வைத்த 'குடிமைப்பணிப் பயிற்சி மையம்'. அந்த மையத்தில் பயின்ற நான்காவது 'பேட்ச்' நான். அப்படி அவர் உருவாக்கிய ஒரு கட்டமைப்பில் இருந்துதான் கிராமப்புற மாணவியான நான், ஐ.பி.எஸ் தேர்ச்சி பெற்றேன். அதனால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை எந்த நாளும் நன்றியுடன் நினைத்துப் பார்ப்பேன்.*

## படிப்பகத்தில் வாசிப்பு

*நான் பிறந்த ஊர் தர்மபுரி. அங்குள்ள குமாரசாமிப்பேட்டை என்கிற பகுதியில் வசித்தோம். அப்பகுதி முழுவதுமே தி.மு.க. வினர்தான். கிட்டத்தட்ட எல்லோர் வீடு களுக்கும் தி.மு.க சார்ந்த ஏடுகள் வரும். தெருமுனையில், இருந்த தி.மு.க படிப்பகத்தில் யார் வேண்டுமானாலும் சென்று படிக்கலாம். அப்படியான சூழலில், எனது பள்ளிப் பருவத்தில் இருந்த வாசிப்புப் பழக்கத்தினால் கலைஞர் படைப்புகளின் அறிமுகம் தொடங்கியது.*

*அவர் எழுத்துகளை வாசிப்பது பிரமிப்பாக இருக்கும். அவரது படங்களின் வசனங்களைக் கேட்டும் அவர் எழுத்துகள் மீது ஈர்ப்பும் கொண்டேன். தூரத்தில் இருந்தே கலைஞரின் படைப்புகளை நேசித்த கடைசி மாணவியாக இருந்தேன்.*

## பெரியாருடன் சந்திப்பு

*1969-ஆம் ஆண்டில் கலைஞர் அமைத்த சட்டநாதன் ஆணையத்தின் பரிந்துரையின்படி, கலைஞர் உருவாக்கிய 'குடிமைப்பணிப் பயிற்சி மையம்' தமிழ்நாட்டில் இருந்து முதல் தலைமுறையாகப் படித்து வந்த இளைஞர்களுக்கு ஆட்சிப்பணிக் கனவுகளைத் தொடங்கி வைத்தது. அப்போதெல்லாம் டெல்லியில் சென்று படித்தால்தான் ஐ.ஏ.எஸ். ஆகமுடியும் என்கிற நிலை இருந்தது. அதை முறியடித்தவர் கலைஞர்.*

*1975-ஆம் ஆண்டில், நான் ஐ.பி.எஸ். தேர்ச்சி பெற்றபோது அதைப் பற்றிய குறிப்பு* **'முரசொலி'***யில் வெளியானது. அதைத் தொடர்ந்து பெரியார் திடலில் இருந்து அழைப்பு வந்தது. நான் தந்தை பெரியாரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றதுடன் நன்றியும் தெரிவித்தேன். "அய்யா உங்கள் கருத்துகள் காரணமாகவும், கலைஞர் எடுத்த முயற்சி யினாலும் கிடைத்த வாய்ப்பு" என்றேன்.*

*ஆனால், தி.மு.க. ஆட்சியினால் கிடைத்த வாய்ப்பினை மகிழ்ச்சியுடன் கொண்டாட முடியாமல் இருந்தேன். ஏனென்றால், நான் பயிற்சியில் இருக்கும் காலத்தில்தான், தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. அதனால், அந்த வருத்தம் இருந்து கொண்டிருந்தது.*



# "ஞானகுரு தந்த வாய்ப்பின் நான்காவது 'பேட்ச்'!"

**திலகவதி,** முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரி

## எழுத்தாளராக மரியாதை



*நான் எழுதத் தொடங்கிய காலத்தில், 1988-ஆம் ஆண்டு எனது முதல் சிறுகதைத் தொகுப்புக்கு தமிழ்நாடு அரசின் விருது கிடைத்தது. அப்போது ஆளுநர் ஆட்சி என்பதால், விழா, விருதுகள் என பெரிதாக எதுவும் இல்லை. அதன் பின்னர், கலைஞர் தலைமையில் ஆட்சி அமைந்திருந்த காலத்தில் எனது இரண்டாவது சிறுகதைத் தொகுப்புக்கும் தமிழ்நாடு அரசு விருது அறிவிக்கப்பட்டது. அதற்கான நிகழ்ச்சி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. அப்போது, கலைஞர் கரங்களால் விருது வாங்கியது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது.*

*கலைஞர், எழுத்தாளர்களை ஊக்குவித்து, மரியாதை செய்யக்கூடியவர் என அறிவேன். அந்த விருது வழங்கும் நிகழ்ச்சிக்குப் பின்னர் அதை நேரடியாக அறிந்தேன். ஒருநாள் கோபாலபுரம் இல்லத்தில் இருந்து அழைப்பு வந்ததும், சென்று சந்தித்தேன். நான் எழுதிய நூல்களை எடுத்துச் சென்றிருந்தேன். அதில் சில நூல்களை அவர் வாசித்ததாகக் கூறியதுடன்,*

> **எந்தச் செலவும் இல்லாமல் குடிமைப்பணித் தேர்ச்சி பெற்று, இந்த வாழ்க்கையை அளித்த தலைவராக கலைஞரை என்றும் நினைத்துப் பார்ப்பேன்.**

*என்னை அமர வைத்து, சக எழுத்தாளர் என்கிற முறையில், உரையாடியது என் வாழ்நாளில் மறக்க முடியாதது.*

*அவருடைய எழுத்து, பேச்சுகள் எல்லாம் 50 ஆண்டுகளாக தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருந்த நிலையில், அப்போதுதான் எழுதத் தொடங்கியிருந்த என்னிடம் அவர் காட்டிய அக்கறையும் மரியாதையும் வியப்பளித்தன.*

## ரயில் பயணங்கள்

*காவல்துறை அதிகாரியாக மட்டும் பார்க்காமல், இலக்கியவாதியாகவும் என்னைப் பார்த்தவர், கலைஞர். நான் ரயில்வே காவலில் பொறுப்பில் இருந்தபோது, கலைஞரின் ரயில் பயணங்களில் அவருக்கு எந்த அசௌகர்யமும் ஏற்பட்டுவிடக்கூடாது என பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்துவேன்.*

*அவரது வெளியூர் பயணங்கள் பெரும்பாலும் ரயில் வழிதான். ஒவ்வொருமுறையும் அவர் வரும்போது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து அனுப்புவேன். ரயில் புறப்பட நேரம் இருக்கிறது என்றால், அழைத்துவிடுவார். அப்போதும் இலக்கிய உரையாடல் தான். 'இந்தியா டுடே' மற்றும் சில ஆங்கிலப் பத்திரிகைகளைக் கூறி, அவற்றில் வந்த தலையங்கம், செய்திகள் குறித்து எனது கருத்து என்ன எனக் கேட்பார்.*

## கட்சிக்கு அப்பாற்பட்டது இலக்கியம்

*கலைஞர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, எனது எழுத்துகளைப் பாராட்டி, அவர் கைகளால் விருது வழங்கும் நிகழ்வு ஒன்று நடைபெற்றது. அப்போது நான் அதிகாரியாக இருந்தேன் என்பதால், நலம் விரும்பிகள் சிலர் அந்த நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டாம் எனக் கூறினர். ஆனால், என் எழுத்துகளுக்காக அளிக்கப்படும் விருது, அதுவும் கலைஞர் அளிக்க உள்ளார். நான் எழுதுவதைக் கவனித்து, அதைப் பாராட்ட வேண்டும், ஊக்குவிக்க வேண்டும் என நினைக்கிறார் எனில், அப்படி ஒரு வாய்ப்பினைத் தவிர்க்க எப்படி மனம் வரும்?*

*நிகழ்ச்சியில், கலைஞர் விருது வழங்க, தற்போதைய மூத்த அமைச்சர் துரைமுருகன் அவர்களும், திராவிடர் கழகத் தலைவர் அய்யா ஆசிரியர் வீரமணி அவர்களும் இருந்தனர். அந்த மேடை இலக்கிய மேடையாக, திராவிட எழுத்துகளைக் கொண்டாடும் மேடையாக அமைந்தது. அங்கு நானும் இருந்தேன் என்பதை இப்போதும் மகிழ்ச்சியுடன் நினைத்துக் கொள்வேன்.*

*எழுத்து, இலக்கியம் எல்லாம் கட்சிப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டது, பாலினப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டது என அன்று கலைஞர் பேசியது மிகுந்த அடர்த்தி கொண்ட மேடைப் பேச்சாக இருந்தது. சிக்கலான விவகாரமாக இருந்தாலும், தனது பேச்சாற்றலால் அதை சமன்படுத்திவிடக்கூடிய ஆற்றல்கொண்ட தலைவராக கலைஞர் இருந்தார்.*

*கலைஞரைக் கைது செய்த நேரத்தில் என்னால் தாங்க முடியவில்லை. ரயில்வே பணியில் இருந்தபோது, அவர் வருகிறார் என்றால், அவர் நடந்து வரும் இடங்களில் எந்தத் தடையும் இல்லாமல், தடுக்கி விழுந்து விடும் வாய்ப்புகள் இல்லாமல் வழியைச் சரி செய்து கொடுத்த நினைவுகள் வந்து வந்து சென்றன. அவர் மறைந்த நேரத்திலும் அதேபோன்ற நினைவுதான். எந்தச் செலவும் இல்லாமல் குடிமைப்பணித் தேர்ச்சி பெற்று, இந்த வாழ்க்கையை அளித்த தலைவராக கலைஞரை என்றும் நினைத்துப் பார்ப்பேன். நான் மட்டுமல்ல, அந்த மையத்தில் பயின்று இன்று இந்தியா முழுவதும் பணியாற்றிக் கொண்டிருக்கும் எல்லோருக்குமே அவர்தான் ஞானகுரு..!*

***....பகிர்வார்கள்***

## கனவும் மழைக் கட்டிடமும்...



புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறக்கப்பட்டு, ஓர் ஆண்டு கூட ஆகவில்லை. மிக நவீனத் தொழில்நுட்பத்துடன் இந்தக் கட்டடம் கட்டப்பட்டிருப்பதாக மார்தட்டிக் கொண்டதுடன், மிக ஆடம்பரமாகத் திறப்பு விழாவையும் நடத்தினார் பிரதமர் மோடி. ஆனால், டெல்லியில் கடந்த சில நாட்களாகப் பெய்த கனமழை காரணமாக, புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள கூடம் ஒன்றின் மேற்கூரையிலிருந்து தண்ணீர் சொட்டியதுடன், நாடாளுமன்ற வளாகத்துக்குள் மழைநீர் வெள்ளம் போலத் தேங்கி நிற்கிறது.

நாடாளுமன்றத்துக்குள் மழைநீர் கசிந்த விவகாரம் தொடர்பாக, காங்கிரஸ் எம்.பி., மாணிக்கம் தாகூர், 'நாடாளுமன்றக் கட்டடத்தில் மழைநீர் வடிகால் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் கேள்விக்குறியாகி இருக்கிறது. இதுகுறித்து விவாதிக்க வேண்டும்' என மக்களவையில் ஒத்திவைப்பு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்.

'பல ஆயிரம் கோடி செலவில் கட்டப்பட்ட புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைவிட, பழைய நாடாளுமன்றக் கட்டடம் சிறந்தது. ஏன் நாம் அங்கு செல்லக்கூடாது?' எனக் கேட்டுள்ளார் சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ்.

2024 மக்களவைத் தேர்தலுக்காகத் திறக்கப்பட்ட ராமர் கோயிலும் மழைநீரில் ஒழுகியது. புதிதாகக் கட்டப்பட்ட நாடாளுமன்றமும் இப்போது பல்லிளிக்கிறது. உத்தரப் பிரதேச சட்டசபைக் கட்டடமும் மழைநீரில் மிதந்துள்ளது.

இதுகுறித்து, தனது ஃபேஸ்புக் பக்கத்தில் பத்திரிகையாளர் பரகத் அலி, "புதிய நாடாளுமன்றத்தைத் திறந்து வைத்த போது மோடி சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது. 'புதிய நாடாளுமன்றம் 140 கோடி இந்தியர்களின் விருப்பங்கள் மற்றும் கனவுகளின் பிரதிபலிப்பாகும்'. கனவு என்றால், மழைக் காட்சிகள் இல்லாமல் இருக்குமா?" என்று விமர்சித்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





**'சங்கீதா' இரா.கண்ணன்**

### இராஜபாளையப் பொதுக்கூட்டம்!

1984-ஆம் ஆண்டு இராஜபாளையம் நகரில் நடைபெற்ற கழக இளைஞர் அணிப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். அப்போது 4 நாட்கள் இராஜபாளையத்திலேயே தங்கி, அந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்தார். அப்படியான தருணத்தில், நான் அவரோடு எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. பரிதி இளவழுதி, தாரை மணியன், இராமமூர்த்தி ஆகியோரும் உடனுள்ளனர்..

**– 'சங்கீதா' இரா.கண்ணன்,**
**பொதுக் குழு முன்னாள் உறுப்பினர், விருதுநகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### எதிர்த்து நின்ற மாநாடுகள்!

1975-ஆம் ஆண்டு, ஜூன் 25-ஆம் தேதி நள்ளிரவு இந்தியாவில் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டது. அடுத்த 24 மணி நேரத்துக்குள், ஜூன் 27-ஆம் தேதி காலையில் கழகத்தின் செயற்குழுவைக் கூட்டினார் கலைஞர். ஒருநாள் இடைவெளியில் மொத்தம் 75 செயற்குழு உறுப்பினர்களில், 63 பேர் கலந்து கொண்டனர். அந்தச் சூழ்நிலையில் மற்ற மாநிலங்களில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கே எதிர்க்கட்சிகள் பயந்தன. ஆனால், தமிழகத்தில் ஆளும் கட்சியாக இருந்த தி.மு.க, மாதத்திற்கு ஒரு மாநாடு என்று அவசர நிலையைத் தனது மாநாடுகளால் எதிர்த்து நின்றது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

559

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131